11.03.2026

GWOP.N0.217/2025

P.W. 1.திரு.அருள்கண்ணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கொசுவலை கம்பெனியில் வேலை பார்க்கிறேன். எனக்கு திருமணம் முடிந்த சமயத்தில் நான் என்ன வேலை பார்த்தேன் என்றால் வெல்டராக வேலை பார்த்தேன். நான் திருமணம் முடிந்த நாளில் இருந்து எனது சொந்த ஊரான மாவடியில் எத்தனை மாதங்கள் இருந்தேன் என்றால் ஒரு வருடம் இருந்தேன். அப்போது எனக்கு குழந்தை பிறந்துவிட்டது என்றால் சரிதான். குழந்தை பிறந்த சமயத்தில் நான் வேலை பார்த்த கம்பெனியில் ஒரு விபத்து நடந்தது என்றால் சரிதான். அந்த விபத்திற்காக நான் வேலை பார்த்த நிறுவனம் எனது மருத்துவ செலவிற்காக ரூ.99,000/- கொடுத்தது என்றால் தெரியவில்லை. எதிர்மனுதாரர் அந்த மருத்துவ செலவிற்காக ரூபாய் இரண்டரை லட்சம் செலவு செய்தார் என்றால் சரியல்ல. நான் நாகர்கோவில் திரவியம் மருத்துவமனையில் சிகிச்சைபெற்றதற்கான செலவு எவ்வளவு ஆனது என்றால் 3 நாட்கள் சிகிச்சை பெற்றேன் ரூ.40,000/- செலவு ஆனது. நான் மாவடியில் இருந்து ஒரு வருட காலத்தில் எனது குடும்பத்திற்கும், எனது குழந்தையின் பராமரிப்பிற்கும் எந்த தொகையும் கொடுத்தது கிடையாது என்றால் சரியல்ல. நான் மாவடியில் இருக்கும்போதும் எனது தாயாரும் தனி சமையலும், எதிர்மனுதாரர் அவரது பணத்தில் தனி சமையலும் செய்து

சாப்பிட்டு வந்தார் என்றால் சரியல்ல. அதன்பிறகு நானும், எதிர்மனுதாரரும் ஆத்தங்கரை பள்ளிவாசலுக்கு சென்று தனிக்குடித்தனமாக இருந்தோம் என்றால் சரிதான். ஆத்தாங்கரை பள்ளிவாசலில் குடியிருக்கும்போது நான் தினமும் குடித்துவிட்டு வந்து எனது மனைவியும், குழந்தையும் அடித்தாக எதிர்மனுதாரர் ஒரு புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் எவ்வளவு மாதங்கள் ஆத்தாங்கரை பள்ளிவாசலில் குடியிருந்தோம் என்றால் ஒன்பது மாதங்கள் குடியிருந்தோம். ஆத்தாங்கரை பள்ளிவாசலில் எதிர்மனுதாரர் எனது கொடுமை தாங்கமுடியாமல் தான் குழந்தையை தூக்கிக்கொண்டு அவரது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. எனது மற்றும் எதிர்மனுதாரர் ஊரின் நாட்டாமைகள் பேசி தான் இனி குடித்துவிட்டு பிரச்சனை செய்யக்கூடாது என்று சொல்லி தான் களக்காட்டில் என்னையும், எதிர்மனுதாரையும் குடியமர்த்தினார்கள் என்றால் சரிதான். அதன்பிறகும் நான் எதிர்மனுதாரரையும், குழந்தையும் துன்புறுத்தியதால் தான் நாங்குநேரி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன்பிறகு தான் எதிர்மனுதாரர் என்னிடம் விவாகரத்து கோரி நாங்குநேரி சார்பு நீதிமன்றத்தில் மனுசெய்தார் என்றால் அந்த பிரச்சனைக்கு முன்பாகவே வழக்கு தொடர்ந்துவிட்டார்கள். நாங்குநேரி சார்பு நீதிமன்ற வழக்கு HMOP.No.5/2023 பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி வழக்கில் நான் வழக்கறிஞர் வைத்து வாக்காலத்து தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன்.

மேற்படி வழக்கில் நான் ஆட்சேபனை தாக்கல் செய்யாததால் ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு நடக்கும்போது எனக்கும், எதிர்மனுதாரருக்கும் வள்ளியூர் சமரச மையத்தில் சமரசம் பேசப்பட்டது என்றால் சரிதான். அந்த சமரசத்திற்கு நான் எத்தனை முறை சென்றேன் என்றால் 3 முறை கூப்பிட்டார்கள். நான் 3 முறையும் சென்றேன். மேற்படி சமரசத்தில் நான் கொண்டு சென்ற எதிர்மனுதாரரின் தொகையும், எனது மகனை வளர்ப்பதற்கான தொகையும் என்னிடம் கேட்டார்களா என்றால் கேட்கவில்லை. அவர்கள் சமரச மையத்திற்கு வரவே இல்லை. நான் சமரச மையத்திற்கு வரவில்லை என்றும், எதிர்மனுதாரர் தான் ஆஜர் ஆனார் என்றும், நான் இந்த வழக்கிற்காக பொய்யாக வந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி வழக்கில் ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி ஒரு மனு தாக்கல் செய்தேனா என்றால் செய்யவில்லை. நான் மேற்படி வழக்கில் ஒரு இடைக்கால மனு தாக்கல் செய்தேன் என்றும் அந்த இடைக்கால மனு எண். 1/2024 ல் ரூ.2000/- எதிர்மனுதாரருக்கு கொடுக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுயிருந்தது என்றும், அந்த தொகையை நான் செலுத்தாதால் மீண்டும் ஒருதலைபட்ச உத்தரவு உறுதிசெய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் எதிர்மனுதாரருக்கு இரண்டாவது திருமணம் முடிந்துவிட்டதால் நான் பணம் செலுத்தி மனுவை மீண்டும் உயிர்ப்பிக்க விரும்பவில்லை. நான் மனுதாக்கல் செய்து மனுவில் உத்தரவு பிறப்பிக்கும் தேதிவரை எதிர்மனுதாரர் திருமணம் செய்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் எனது மகனை வளர்க்க ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்ததால் தான் இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் என்னையும், எனது குழந்தையும் அடித்தாக சொல்லியுள்ள விஷயம் எந்த தேதியில் எங்கு வைத்து என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் தற்போது செய்து வரும் வேலையில் எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்பது பற்றியும் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மகன் எந்த பள்ளியில் படிக்கிறான் அதற்கு எவ்வளவு கட்டணம் செலுத்தவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இதுவரை எனது மகனுக்கு எந்த செலவும் செய்யவில்லை என்றால் இல்லை. என்னை பார்க்கவிடவில்லை அதனால் செலவு செய்யவிடவில்லை. எனது மகன் எனது உடன் இருந்த இரண்டு வருடங்களில் நான் அவனுக்கு என்ன செய்தேன் என்று எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு நிலைய வருமானம் கிடையாது என்றும் எனது குழந்தை என்னுடன் இருந்தபோது நான் குழந்தையை அடித்துள்ளேன் என்றும், குழந்தையை வளர்ப்பதற்கான வசதி என்னிடம் கிடையாது என்றால் சரியல்ல. நான் தினம் குடித்துவிட்டும், கஞ்சா போதையில் இருப்பதால் தான் எதிர்மனுதாரர் என்னை விட்டு குழந்தையை எடுத்துக்கொண்டு சென்றார் என்றால் சரியல்ல. அதன்அடிப்படையில் தான் HMOP.5/2023 வழக்கில் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள எந்த பரிகாரமும்

எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரிடம் பெற்ற நகையையும், குழந்தைக்கான பராமரிப்பு செலவு எதுவும் இதுவரை கொடுத்ததில்லை என்பதால் என்னுடைய மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.